[1994 மே 5

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 538, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

538—

சென்னை சிந்தாமணி கூட்டுறவு அமைப்பு நட்டத்தில் இயங்குவதைத் தடுக்க நடவடிக்கை.

*10939—திரு டி. சுதர்சனம்:

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை சிந்தாமணி கூட்டுறவு அமைப்பு நட்டத்தில் இயங்குவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை நகரில் 'சிந்தாமணி' என்ற பெயரில் இயங்கி வரும் பூங்காநகர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை 22—3—1959 முதல் செயல்பட்டு வருகிறது. இந்தப் பண்டகசாலை சில ஆண்டுகளில் லாபத்திலும் சில ஆண்டுகளில் நட்டத்திலும் நடைபெற்று வருகிறது. இப்பண்டகசாலை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு 1985-86 முதல் 1990-91 வரையிலான ஆண்டுகளுக்கு மானியமாக ரூ. 20.87 இலட்சங்கள் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு காசுக் கடன் கணக்கின் கீழ் ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு வரும் வட்டித் தொகையான ரூ. 75.00 இலட்சத்தை ரூ. 47.00 இலட்சம் அளவில் குறைப்பதற்காக எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன மேலும் சரக்கு இருப்புக் குறைவு ஏற்படுத்திய பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து அவைகளை மீண்டும் பெறுவதற்கு எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பங்காடி 1959-ம் ஆண்டு துவக்கப்பட்டது என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சில ஆண்டுகளில் நஷ்டமும் சில ஆண்டுகளில் லாபமும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த ஆண்டு முதல் அது நஷ்டத்தில்

1994 மே 5]

இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் மொத்தம் எவ்வளவு கோடி ரூபாய் நஷ்டத்தில் அது இயங்கியது என்பதையும் விவரமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பண்டகசாலை 1959 முதல் 1965 வரை நிகர லாபத்திலும், 1965 முதல் 1975 வரை நிகர நட்டத்திலும், 1975 முதல் 1982 வரை நிகர லாபத்திலும், 1982 முதல் 1987 வரை நிகர நட்டத்திலும், 1987 முதல் 1988 வரை நிகர லாபத்திலும், 1988 முதல் 1992 வரை நட்டத்திலும் இயங்கி வருகிறது. ஆக இதிலே ரூபாய் கடன்கள் 70 லட்சத்திற்கு மேற்பட்டு இருந்தாலும்கூட அவைகளை சீர் செய்வதற்கு எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுத்துவருகிறோம். சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தப்படும் வட்டித் தொகைக்கு, அதாவது ஒரு பகுதியான 100 லட்ச ரூபாயை நீண்ட காலக் கடனாக மாற்றுவதற்கு எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இந்தக் கடையின் கீழ் ஏறத்தாழ 24 நியாய விலைக் கடைகள் தங்களுடைய பணிகளைச் செய்து வருகின்றன. நியாய விலைக் கடைகளின் மூலமாக பொது மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற அத்தியாவசியமான பொருள்களை விநியோகிப்பதில் சில இடர்பாடுகள் இருக்கின்றன. அதாவது ஒரு குவிண்டாலுக்கு 2 ரூபாய் லாபம் வந்தால் நஷ்டம் 4 ரூபாய் வருகிறது அரிசி முதலிய பொருள்களை விற்பனை செய்வதில். அதற்காகத்தான் புரட்சித் தலைவி அவர்கள் தொலைநோக்குப் பார்வையோடு இப்படிப்பட்ட நஷ்டத்தைக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே குவிண்டாலுக்குப் பத்து ரூபாயாக இருந்த பணத்தை இன்றைய தினம் இருபது ரூபாயாக உயர்த்தி அந்த நஷ்டத்தைக் குறைப்பதற்காக எல்லாவிதமான வசதிகளும் செய்து வந்திருக்கிறார்கள். இன்னும் மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு நாம் செலுத்துகின்ற அந்தக் கடனுக்காகக் கொடுக்கப்படுகின்ற வட்டியை குறைப்பதற்காகப் பல்வேறு திட்டங்களை இந்தத் துறை எடுத்து வருகிறது என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நியாய விலைக் கடைகள் கட்டுப்பாடற்ற பொருள்களையும் விற்பதற்காக எல்லாவிதமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதன் மூலமாக நஷ்டத்தைக் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. சுதர்சனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களுக்கு அத்தியாவசியப் பண்டங்கள் எல்லாம் மலிவு விலையில் கிடைக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட சிந்தாமணி கூட்டுறவுச் சங்கமானது, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்ட பின்னால் தான் அதிக அளவுக்கு நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. தனி

அதிகாரிகள் அந்தப் பொருள்களை வாங்குகின்றபோது பல்வேறு காரணங்களுக்காக தரம் அற்ற பொருள்களை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். இன்றைக்கு சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி மூலமாக ஆவடியிலே 4 கூட்டுறவுக் கடைகள் இருக்கின்றன. அதிலே தரமான பொருள்கள் எல்லாம் கிடைப்பது இல்லை.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிந்தாமணி கூட்டுறவுப் பண்டக சாலையின் மூலமாக விநியோகிக்கப்படுகின்ற பொருள்கள் எல்லாம் தரமான பொருள்களாக அந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் மூலமாக வாங்குவதற்கு முன்பாகவே பார்வை யிடப்பட்டு அவைகளுடைய தரங்களை எல்லாம் பரிசோதனை செய்து அதற்குப் பின்னாலேதான் வாங்கப்படுகிறது. அப்படி இங்கு ஒன்றும் அங்கு ஒன்றுமாக தரக் குறைவான பொருள்கள் இருக்குமானால் அதை பொதுமக்களுக்கு விநியோகிப்பதை நிறுத்துவது என்று முடிவு செய்து அதன் மூலமாக பொதுமக் களுக்கு நிறுத்தியே வைக்கப்பட்டிருக்கிறது. தனி அதிகாரிகள் மூலமாக அங்கே தவறுகள் நடைபெறுகின்றன என்று சொல் கின்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்வதற்கில்லை. காரணம் அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் இந்த அங்காடியைப் பொறுத்த மட்டிலே எங்களிடம் எதுவும் வரவில்லை. அப்படி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்து குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அதை குறிப்பிட்டுத் தெரிவித்தால் இந்த அரசு நிச்சயமாக உரிய நட வடிக்கையை உரிய நேரத்திலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 539, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

539—

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொலைபேசி வசதியுடன் நடமாடும் மின்சாரப் பிரிவு ஏற்படுத்துதல்.

*16026—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின் தடங்கலைச் சரிசெய்ய கோயம்புத்தூர் மாநக ராட்சியில் தொலைபேசி வசதியுடன் நடமாடும் மின்சாரப் பிரிவு ஏற்படுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?